‘கெதார அள்ள’ ஆற்றின் குறுக்கே பாலம்

* வினா எண். 781 — திரு. கே. உச்சி: மாண்புமிகு போக்கு வரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

உதகை தாலுக்கா, ஏப்பநாடு, தூனேரி, சின்னக்குன்னூர், கடனாடு ஊராட்சிகளை இணைக்கும் தொரையட்டி-எப்பநாடு சாலையில் ஓடும் ‘கெதார அள்ள’ ஆற்றின் குறுக்கே ஒரு பாலம் கட்ட அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : ஆம்.

தமிழ் நாட்டில் உற்பத்தியாகும் உரம்

* வினா எண். 782 — திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) தமிழ்நாட்டில் தனியார் துறையிலும், பொதுத் துறையிலும் உற்பத்தியாகும் உரம் எவ்வளவு?

(ஆ) இரண்டிற்கும் உள்ள விலை வித்தியாசம் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு :

(அ) & (ஆ) விவரஅறிக்கை ** அவையின் முன் வைக்கப் பட்டுள்ளது.

உர விலை

* வினா எண் 783 — திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு வேளாண்மை பாசனத் துறை அமைச்சர் வினா எண். 158-க்கு பேரவையில் 3-1-78 அன்று அளித்த விடையையொட்டி கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

உர விலையைக் குறைப்பது குறித்து மத்திய அரசிடமிருந்து தகவல் ஏதும் வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : ஆம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் கொடுக்கப்பட்டிருக்கிற விவர அறிக்கையில் தனியார் துறையில் யூரியா 37 லட்சம் அளவிற்கும்,

**119 ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.